18.02.2025

அ.வ.எண். 35/2022

பி.வாசா.1 - பாலாமணி

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்துகொண்டு தான் கையொப்பம் செய்தேன். 1912 செட்டில்மெண்ட் பிளான் ரிஜிஸ்டர் படி புல எண்.242 ன் மொத்த விஸ்தீரணம் 10.31 ஏக்கர் என்றால் ஆமாம். அந்த பூமி 1920 ல் கணபதி தேவர், ராம தேவர் என்பவர்கள் கிரயம் பெற்றுள்ளார்கள் என்றால் ஆமாம். அதன்படி 1924 ம் ஆண்டில் கணபதி மற்றும் அருணாச்சல கவுண்டருக்கு தலா 5.16 ஏக்கர் ஒதுக்கப்பட்டு பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் ஆமாம். அந்த பாகப்பிரிவினை படி எனது தாத்தா அருணாச்சல கவுண்டருக்கு பி-ஜாபிதா சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம். என் தாத்தாவிற்கு மேற்படி ஆவணத்தில் ஒதுக்கப்பட்ட 5.16 ஏக்கர் தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் ஆமாம்.

1954 ல் என் தாத்தா வேலப்பண்ணாடி மகன் கருப்ப பண்ணாடிக்கு 60 சென்ட் விற்பனை செய்துவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி 60 சென்ட் தற்போது உட்பிரிவின் படி 242/2C- இல் உள்ளது என்றால் சரியல்ல. அந்த 60 சென்ட் போக என் தாத்தாவிற்கு மீதம் 4.56 ஏக்கர் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ-3 ஆவணத்தில் 242/1 ல் கிழகோட்டில் தென்புறம் 60 சென்ட் என்று எல்லைக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த இடம் தற்போது உட்பிரிவு படி 242/2D ல் உள்ளது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு அருணாச்சல கவுண்டர் வேறு எந்த ஆவணமும் சொத்துக்கள் பொறுத்து எழுதாமல் இறந்துவிட்டார். அருணாச்சல கவுண்டருக்கு முத்துசாமி, மருதாக்காள், சுப்பாத்தாள் என்ற 3 வாரிசுகள் உள்ளனர். அந்த 3 வாரிசுகளுக்கு தான் இந்த 4.56 ஏக்கர் பூமி தலா 1.52 ஏக்கராக உள்ளது என்றால் ஆமாம்.

அருணாச்சல கவுண்டர் 1959 ல் கூட்டுறவு வங்கியில் அடமான கடன் வைக்கும்போது தான் சொத்திற்கு நான்கு எல்லை குறிப்பிட்டு எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை. அதில் ராயப்ப பண்ணாடி

பூமிக்கு கிழக்கில், மருதாச்சல தேவர் பூமிக்கு தெற்கு, கருப்ப பண்ணாடி பூமிக்கு மேற்கு, நஞ்சப்பண்ணாடி பூமிக்கு வடக்கு என்று எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. மேற்படி 1959 ஆவணத்தை பற்றி வழக்குரையில் சொல்லாமல் ஆவணம் தாக்கல் செய்யாமல் கேள்வி கேட்கப்படுவதாக பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டது. 1984 முதல் 1989 வரையிலான UDR திட்டததின் கீழ் உட்பிரிவு செய்யப்படும்போது எங்களது குடும்பத்திற்குள் 242/1A இல் 2.27 ஏக்கர், 242/1B-இல் 1.68 ஏக்கர், 242/2A-இல் 2.29 ஏக்கர் மொத்தமாக 6.24 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டதாக சொல்லியுள்ளோம் என்றால் ஆமாம்.

அருணாச்சல கவுண்டரின் மகன் முத்துசாமிக்கு வாரிசு இல்லை. திருமணம் ஆகவில்லை. அதனால் மேற்படி முத்துசாமி மருதாக்காளின் மகனான S.A.பழனிச்சாமியை தத்தெடுத்துகொண்டார் என்றால் ஆமாம். அவ்வாறு தத்தெடுத்துகொண்டதால் 6 ல் 4 பாகம் அவர்கள் எடுத்துகொண்டார்கள் என்றால் சரியல்ல. முத்துசாமி என்பவர் கந்தசாமி மகன் ராமசாமி என்பவருக்கு ஆவண எண்.499/2007 ல் என்ற ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் படி என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் 242/1A மற்றும் 242/2A வில் தான் மொத்தம் 4.56 ஏக்கரும் உள்ளதாக குறிப்பிடப்ட்டுள்ளது என்றும் இந்த ஆவணத்தை நான் ஒப்புகொண்டால் உண்மை தெரியவரும் என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

22.06.2007 ல் ஆவண எண்.6377/2007 என்ற ஆவணத்தின் படி முத்துசாமி ஒரு கிரய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் தெரியவில்லை. அந்த கிரய ஆவணத்திலும் மேற்படி 4.56 ஏக்கரும் புல எண்.242/1A மற்றும் 242/2A வில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு உண்மைகள் தெரிந்தும் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயாரும், என் சித்தியும் திருப்பூர் சார்வு நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை கேட்டு அ.வ.எண்.490/2009 என்ற வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் முத்துசாமி கவுண்டர் எங்களுக்கு உரிய பாகத்தினை கொடுப்பதாக ஒப்புகொண்டதால் வழக்கை திரும்ப பெற்றுக்கொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. முத்துசாமி கவுண்டர் 21.10.2011 ல் ஒரு பிழைதிருத்தல் ஆவணம் ஏற்படுத்தி கொண்டார் என்றால்

எனக்கு தெரியாது. அந்த பிழைதிருத்தல் ஆவணத்தின் படி என் தாயாருக்கும், என் சித்திக்கும் வழக்கு சொத்தில் 6 ல் 2 பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. அதன் படி தான் எங்களுக்கு 1.52 ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

அந்த ஆவணத்திலும் என் தாத்தா பெயரில் இருந்த பி.வா.சா.ஆ-2 ஆவணத்தை மூல ஆவணமாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். 1.52 ஏக்கரை தவிர வேறு பூமிகள் ஒதுக்கப்படவில்லை என்றால் ஆமாம். 1.52 ஏக்கரை என் தாயாரும், என் சின்னம்மாவும், என் கணவர் வேலுச்சாமிக்கு 2012 ல் கிரயம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் என்னுடைய சொத்து புல எண்.242/1A, 2A-வில் தான் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த ஆவணத்தின் அடிப்படையில் என் கணவர் 2015 ம் ஆண்டில் ஆவண எண்.4562/2015 படி ஒரு தடப்பாத்திய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் ஆமாம். இந்த ஆவணத்தில் என்னுடைய சொத்து புல எண்.242/1A, 2A-வில் தான் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் ஆவணங்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2015 தடபாத்திய ஆவணத்திலும் பி.வா.சா.ஆ-2 ஆவணத்தை மூல ஆவணமாக காட்டியுள்ளோம் என்றால் ஆமாம். ஏற்கனவே எங்களுக்கு வந்த சொத்துக்களை 1.52 ஏக்கரை நாங்கள் என் கணவருக்கு 2012 ல் எழுதி கொடுத்துவிட்டோம் என்றும், அதன் பின்னிட்டு வாதி சொத்தை அபகரிக்க நாங்கள் முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஏற்பட்ட உட்பிரிவு குளறுபடியில் வாதியின் வழக்கு சொத்தை நாங்கள் பி.வா.சா.ஆ-4 ஆவணம் மோசடியாக ஏற்படுத்திய ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-4 மற்றும் 5 ஆவணங்களில் மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் நான்கு எல்லை எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 242/1B இல் எங்களுக்கு சொத்தே இல்லை என்று சொன்னால் சரியல்ல.
எங்களுக்கு 242/1A, 2A வில் தான் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. 242/1B இல் எங்களுக்கு சொத்து உள்ளதாக காட்ட என்ன மூல ஆவணங்கள் உள்ளது என்றால் பத்திரம் உள்ளது.

பி.வா.சா.ஆ-2 ஆவணத்தன் அடிப்படையில் தான் பி.வா.சா.ஆ-4 ஆவணமும் ஏற்படுத்தி உள்ளோம், ஆனால் பி.வா.சா.ஆ-2 ல் உள்ள சொத்தினை குறிப்பிடாமல் வாதி

சொத்தை மோசடியாக குறிப்பிட்டு விற்பனை செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஏற்கனவே பி.வா.சா.ஆ-2 ஆவணத்தில் உள்ள சொத்தை எனது கணவருக்கு விற்பனை செய்துவிட்டு மீண்டும் சொத்து இருப்பதாக பி.வா.சா.ஆ.3, 4 ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. பட்டாவின் அடிப்படையில் நாங்கள் செய்து கொடுத்த கிரயம் செல்லாது என்றால் சரியல்ல. நானும், என் சித்தியும், வாதியின் சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. 1958 ம் ஆண்டு முதல் தற்போது வரை வாதி தான் அவரது சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல.

பழனிச்சாமி என்பவர் எங்களது சொத்து சம்பந்தமாக அ.வ.எண்.891/2023 என்ற வழக்கை கோயம்புத்தூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு அவருடைய சொத்து 242/1 A, 2 A ல் உள்ளது என்று, விளம்புகை செய்ய கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நான் 8ம் பிரதிவாதி, என் கணவர் 7ம் பிரதிவாதி என்றால் ஆமாம். இந்த வழக்கில் நான் ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் 06.06.2024 ல் எங்களுக்கு சமாதானமாக போக மனுத்தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வருவாய் துறையில் பட்டா மாறுதல் செய்ய கேட்டு வாதி மனுத்தாக்கல் செய்துள்ளது எனக்கு தெரியும். அந்த மனுவில் நானும் ஆஜராகிறேன் என்றால் ஆமாம். அதன் படி வட்டாட்சியர் புல தணிக்கை செய்து அறிக்கை செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகளை மறைத்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அந்த ஆவணத்தின் படி அருணாச்சல கவுண்டருக்கு 242/1A1, 1A2, 242/2A ஆகியவற்றில் தான் எங்களது சொத்துககள் உள்ளதாக அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதிகளுக்கு 242/1B இல் ஆவண எண்.1958 படி 1.65 ஏக்கர் பூமி உள்ளதாக அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. நில உடைமை மேம்பாட்டு திட்டததில் முத்துசாமி வகையறாவுக்கு கூடுதலாக 1.65 ஏக்கருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளதாக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த அறிக்கையில் தற்போது ஆவணப்படியும், அனுபவப்படியும் வாதிகள் அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ளனர் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை தெரிந்துகொண்டு நான்

மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வட்டாட்சியரை விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை.

உதவி இயக்குநர் அவர்கள் கடந்த 18.09.2024 அறிக்கைபடி எங்களுக்கு கூடுதலாக நிலம் உள்ளதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே நாங்கள் மோசடியாக மூல ஆவணங்கள் இல்லாமல் ஏற்படுத்திய பி.வா.சா.ஆ-4 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/பாலாமணி

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur